# ஊடலில் எடுத்துரைப்பியல்

ப. உமாமகேஸ்வரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை

ஒவ்வொரு செயலுக்கும், அதற்குச் சமமான எதிர்விளைவு உண்டு என்பது நியூட்டனின் விதி. அவ்விதியை வாழ்க்கையின் உண்மையாக எடுத்துரைக்கும்விதமாக அமையப்பெற்றது சங்க இலக்கியம். இயற்கை என ஒன்று இருந்தால் செயற்கையும் இருக்கும். அவ்வாறு இன்பம் துன்பம் என்ற இரண்டும் கலந்ததுதான் வாழ்க்கை. சங்க இலக்கியப்பாடல்களில் எல்லாப் பகுப்புமுறையும் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அகமும், புறமும் சேர்ந்தது சங்கபாடல்கள். அகப்பாடல்களில் களவும் கற்பும் என்ற பகுப்புமுறை காணப்படுகிறது.

திருமணத்திற்கு முன் வாழும் வாழ்க்கை களவு என்றும் திருமணத்திற்குப் பின்னர் வாழும் வாழ்க்கை கற்பு என்றும் கொள்வது தமிழ்நெறி. தலைவன் தலைவியின் கூடலில் இன்பம் தழைத்தாலும், ஊடலில் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிவு நிலையை எடுத்துரைக்கும் பாடல்கள் உள்ளன. அவ்வாறு காணப்படும் பாடல்களில் எடுத்துரைப்பு (Narrative) உத்தி எவ்வாறு கையாளப்பட்டுள்ளது என்பதை இக்கட்டுரை விளக்குகிறது. ஆய்வுக் கட்டுரையின் வரையறை கருதி அகநானூற்றில் மருதத்திணையில் உள்ள சில பாடல்கள் மட்டும் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**எடுத்துரைப்பியல்**

சங்கச் சான்றோர்கள் ஒவ்வொரு செயல்களையும், ஒரு முறைமை வைத்துப் பின்பற்றியவர்கள். அவற்றில் நினைவில் வைத்துச் சங்கப்பாடல்களை நோக்கும் போது சொற்களைப் பயன்படுத்தும் முறையிலும், சொற்றொடர்களை உருவாக்குவதிலும், கருத்து, பொருள் போன்றவற்றைப் பதிவாக்குவதிலும், இலக்கண முறைமைகளைப் பின்பற்றுவதிலும் தனிநெறியைக் கொண்டுள்ளனர். எனவே இலக்கியம் என்பது படைப்பாளிக்கும், வாசகருக்கும் இடையிலான தொடர்பாடலுக்கான ஊடகம். எடுத்துரைப்பியல் படைப்பாளியையோ, வாசகரையோ கருத்தில் கொள்வதில்லை. பதிலாக, படைப்புகளில் இருந்தே உட்கிடையான படைப்பாளியையும், உட்கிடையான வாசகரையும் எடுத்துரைப்பியல் கருத்தில் கொள்கிறது. இதன்மூலம் இவ்வகைத் திறனாய்வு படைப்பாளியையோ, வாசகரையோ மையப்படுத்தாமல் படைப்பின் உரையையோ மையப்படுத்துவதாக உள்ளது. நம்மிடம் வந்தடையும்

தகவல்கள் அல்லது செய்திகள் அனைத்துமே திரித்துக் கூறப்படுபவைதான் என்ற உண்மையைத் தினசரி வாழ்க்கையில் சான்று காட்டுகிறார் க.பஞ்சாங்கம். "ஒருவர் சந்தையில் ரத்த வாந்தி எடுத்தான்" என்ற தகவல் ஒவ்வொரு மனிதனாகக் கடந்து இறுதியில் "நம்ம தெரு நல்லதம்பி இருக்கானில்ல அதான் ஒங்க சித்ப்பா மகன் நல்லதம்பி, மந்தையிலே காக்கா காக்காவா வாந்தி எடுத்தானதமில்ல, உனக்குத் தெரியுமா? என்னப்பா அதிசயம்!" என முடிகிறது. இச்செய்தி அதைக்கொண்டு சேர்க்கும் மனிதரைப் பொருத்து விரியவோ அல்லது சுருங்கவோ செய்கிறது.

**எடுத்துரைப்பின் அலகுகள்**

1. நிகழ்ச்சிகள் – கதை
2. நிகழ்ச்சிகள் குறியீடுகள் – பனுவல் (Text)
3. எடுத்துச் செல்லும் அல்லது செயல்பாடென்றும் சொல்லலாம். எடுத்துரைப்பு மொழியியல் வல்லுநர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையிலேயே எடுத்துரைப்பியல் நிகழும் என்பதை க.பஞ்சாங்கம் கட்டுரையின் மூலம் அறியலாம்.

**ஊடல்**

ஐவகை திணைகளில் மருதத்திணையின் உரிப்பொருள் ஊடல் ஆகும். ஊடல் பற்றிய செய்திகளும், ஊடலுக்கான காரணங்களும் மருதத்திணையில் அதிகம் காணப்படுகின்றன. இதைத் தொல்காப்பியம் புலவி என்ற பெயரால் வழங்கிறது. புலவிப்பத்து என்று உரிப்பொருள் பெயராலேயே ஒரு பத்தின் தொகுப்பு இத்திணையில் அமைந்துள்ளது.

"துணையோார் செல்வமும் யாமும் வருந்துதும்
வஞ்சி ஓங்கிய யாணர் ஊர
தஞ்சாம அருளாய் நீயேநின்
நெஞ்சம பெற்ற இவளுமார் அழுமே" (பொருள் – அகத்திணை–50)

என்ற பாடலில் தலைவன் பரத்தைமை மாட்டுப் பிரிந்து சென்றமையால் தலைவி ஊடியும், வருந்தியும் இருப்பதையும் அதனால் இல்லத்திற்குத் திரும்ப வேண்டும் எனத் தோழி வலியுறுத்துவதையும் காணலாம். ஊடலின் முக்கியத்துவம் தொல்காப்பியத்திலேயே உணர்த்தப்படுவதை அறிய முடிகிறது.

ஊடல் கொள்வதற்கான நிகழ்வுகளும், நிகழும் இடங்களும் வார்த்தைக் குறியீடுகளும், உரையாடுபவர்கள் எடுத்துரைப்பில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. மருதத்திணையில் ஊடல் கொள்ள முக்கியக் காரணமாக விளங்குவது, பரத்தை ஆகும். தலைவனின் நெறிபிறழ் நடத்தையால் கோபம்கொண்ட தலைவி தலைவனைத் தனது ஆற்றாமையை வெளிப்படுத்தும்விதமாக பாடல் அமைந்துள்ளது.

தலைவியின் ஊடலைத் தீர்க்க விறலியினைத் தூதாக அனுப்புவது இந்நிகழ்வு ஆகும். விறலியிடம் வாயில் மறுத்து தோழி தலைவி தோழிக்குச் சொல்வது போல் அமைந்தது இப்பாடல்,

**வார்த்தைக் குறியீடுகள்**

இப்பாடலில்

என்னனப் படும்கொல் – தோழி! – நல்மகிழ்ப்
பேடிப் பெண்கொண்டு ஆடுகை கடுப்ப,
நகுவரப் பணைத்த திரிமருப்பு எருமை
மயர்க்கவின் கொண்ட மாத்தோல் இரும்புறம்
சிறுதொழில் மகாஅர் ஏறி, சேணோர்க்குத்
துறுகல் மந்தியின் தோன்றும் ஊரன்– (அக.206)

கள்ளுண்ட களிப்புடன் பேடிப் பெண்ணின் உருவம் பூண்டுக் கூத்தாடுவது என்று கூறும்போது பொய்யாகச் சில நிமிடங்கள் நீடிக்ககூடிய இன்பத்திற்கு தலைவன் முக்கியத்துவம் தருவதால் எந்தப்பயனும் இல்லை என்பதை உணர்த்தும்விதமாக அமைந்துள்ளது. எருமையின் முதுகில் சிறுவர்கள் இருப்பதைக் கூறும்போது பொருத்தமில்லாத செயல்களைச் செய்வதை இழிவான உவமைகள் மூலம் எடுத்தரைப்பதை அறியலாம். அவ்வரிகளில் இழிவு, பாதிப்பு, சிறுவர்களுக்கே, எருமைக்கு அல்ல என்பது உணர்த்தப்படுகிறது. இவ்விடத்தில் எருமையாக – பரத்தையும். சிறுவர்களாக – தலைவனின் செயல்கள் மற்றும் கருங்கல், மந்தி என்று பொருத்தமான வார்த்தைக் குறியீடுகளைப் பயன்படுத்தி உள்ளதை அறியலாம்.

மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன
மழைக்குத் தழையும் தளிதினைப் போன்ற பரத்தை

என்ற கூறும்போது பரத்தையின் நிலையற்ற தன்மையை விளக்குகிறது. இப்பாடலில் இழிவான செயல்களை மற்றும் உவமைகளை தலைவனுக்கு எடுத்துக்காட்டி, சிறப்பான வார்த்தைக் குறியீடுகளைப் பரத்தைக்குப் பயன்படுத்தியுள்ளதை அறியமுடிகிறது.

(உ–ம்) மந்தி, எருமை, சிறுவர் செயல்கள், பேடிப்பெண், கள்ளுண்ட களிப்பு – தலைவன், மாமை நிறமேனி, ஆராய்ந்தெடுத்த அணிகலன்,

**எடுத்துரைப்பு**

தலைவியின் எடுத்துரைப்பு சிறப்பபான முறையில் இப்பாடலில் அமைந்துள்ளது. விறலியுடன் நேரடியாக உரை நிகழ்த்தாத தன்மை, சிறப்பான உவமைகள் மூலம் தன் ஆற்றாமையை எடுத்துரைக்கும் விதம் மற்றும் தலைவனை மட்டும் இகழ்வதாக இப்பாடல் அமைந்துள்ளது. பரத்தையைக் குற்றம் சாட்டுவதாக அமையவில்லை.

“அடுபோர் வேளிர் வீரை முன்துறை
நெடுவெள் உப்பின் நிரம்பாக்குப்பை
பெரும் பெயற்கு உருகி” (அக – 206)

வீரை, நிரம்பாக்குப்பை, உருகுதல் போன்றவற்றின் சொற்களைக் கையாளும் தன்மையின் மூலம் தன் நிலையையும், தவிப்பையும் எளிதில் சென்றடையும் விதமாக இப்பாடல் அமைந்துள்ளது.

**காவிரி ஊடல் நிகழ்ச்சி**

தலைவன் பரத்தையுடன் காவிரியில் நீராடினான் என்ற செய்தியைக் கேட்டுத் தலைவி ஊடி இருந்தாள். மீண்டும் தலைவன் தலைவியிடம் வந்தபொழுது தலைவியின் ஊடல் அறிந்து தோழியிடம் வாயில் வேண்டினான்.

**வார்த்தை குறியீடுகள்**

உணர்குவென் அல்லென், உரையல் நின் மாயம்,
நாண் இலை மன்ற – யாணர் ஊர!– (அக – 226)

என்ற அடிகளில் தலைவனின் பொய்மொழிகளையும், வார்த்தை ஜாலங்களையும் தோழி அறிவாள் என்பதை முடிகிறது. நாண் இலை என்று கூறும்பொழுது தலைவன் தன் இழிவான செயல்களைக் கண்டு நாணம் கொள்ளவில்லை. இழிவான செயல்களுக்கு என்றும் வெட்கித் தலைகுனிய வேண்டும். தலைவன் அச்செயலை எண்ணி என்றும் வெட்கம் கொள்ளாதவன் என்பதை அறியமுடிகிறது.

"அகலுளி ஆங்கண், அம்பகை மடிவை,
குறுந்தொடி, மகளிர் குரூஉப்புனல் முனையின்,
பழனப் பைஞ்சாய் கொழுதி, கழனிக்
கரந்தைஅம் செறுவின் வெண்குருகு ஒப்பும்" — (அக – 226)

பெண்களின் ஆபரணங்கள், நேர்த்தியான உடைஅமைப்பு கேளிக்கையான பொழுதுபோக்குகள் இருந்தாலும், தன்னுடைய பொழுதுபோக்கினைக்கூடச் சரியான முறையில் பயன்படுத்துபவர்கள் உன் நாட்டு மக்கள் என்பது சிறந்த வார்த்தைக் குறியீடுகள் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

புனல் விளையாட்டு, கரந்தை உடைய வயலில் வெண்ணிற நாரை போன்ற சிறப்பான வார்த்தைக் குறியீடுகள் மூலம் மருதநில மக்கள் தங்கள் நேரத்தை விணடிக்காமல், பொழுதுபோக்குகளைக்கூடப் பயன் உள்ளதாகக் கழித்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது.

**எடுத்துரைப்பு**

"வல்வில் எறுழ்த்தோள் பரதவர் கோமான்,
பல்வேல் மத்தி, கழாஅர் முன்துறை,
நெடுவெண் மருதொடு வஞ்சி சா அய,
விடியல் வந்த பெருநீர்க் காவிரி
.................." (அக – 226)

பரதவர் கோமான் வலிமைகளை எடுத்துரைத்துப் பின்னர் காவிரியின் வலிமையைக் கூறும்போது பரத்தையின் தீய குணங்களையும் தன் நாட்டின் வளத்தையும், வலிமையையும் சிறந்த உவமைகளால் காட்டியுள்ளனர். போரின் ஆரவாரத்தை ஊரலர் உடன் ஒப்பிட்டுத் தலைவனின் ஒவ்வாமைச் செயலையும், தலைவனின் வஞ்சக உரைகளை நம்பாத தன்மையைத் தோழியின் உரைமூலம்

அறியலாம். பரத்தையுடன் கொண்ட உறவானது காட்டாற்று வெள்ளம் மரங்களை எவ்வாறு அடித்துச்செல்லுமோ அதுபோல் உன் நிலை தனிமை இழந்து வெறுமையாகி விடுவாய் என்பதை அழகாக எடுத்துரைக்கிறது.

**ஊடலில் கூடல் நிகழ்ச்சி**

தலைவன் பரத்தமை ஒழுக்கத்தை மேற்கொண்டதை எண்ணி தலைவி ஊடல் கொண்டிருந்தாள். ஆனால் இல்லம் திரும்பிய தலைவனை ஊடாமல் அவனுடன் மகிழ்ந்திருந்தாள், மறுநாள் தலைவி அதற்கான காரணத்தைத் தோழியிடம் கூறுதல் இப்பாடலின் நிகழ்வு,

**வார்த்தைக் குறியீடு**

"மணிமருள் மலர முள்ளி அமன்ற,
துணிநீர், இலஞ்சிக் கொண்ட பெருமீன்
அரிநிறக் கொழுங்குறை வெளவினர் மாந்தி" (அக – 236)

வெண்மையையும், நீலமணி என்று கூறி நிலத்தையும் ஒப்பிட்டு அந்நில மக்களின் வளத்தையும், நிலவளத்தையும் நிறக்குறியீடுகளை வளத்திற்குக் கூறியுள்ளமையை அறியலாம். தலைவனின் நாணத்தை இகழ்ந்து கூறாமல், பெண்ணின் இயற்கை நாணத்துடன் ஒப்பிட்டு உயர்வான உவமைகளானச் சந்தனம், அழகிய பட்டாடை, மகரக்குழை போன்ற வார்த்தைக் குறியீடுகளைப் பயன்படுத்தியுள்ளமை இப்பாடலின் சிறப்பு.

**எடுத்துரைப்பு**

பொதுவாக, ஊடல் என்ற கண்ணோட்டத்தில் பாடலை நோக்கும்போது தவறுகளைச் சுட்டிக்காட்டும்விதமாகவும், இகழ்ந்து உரைப்பதாகவும், உளவியல்ரீதியான மனப்பாதிப்புகளை வெளிப்படுத்தும்விதமாகவும் அமையும். ஆனால் இப்பாடல் முழுவதும் வேறுபட்டுத் தலைவியின் மன்னிக்கும் குணத்தையும், தலைவனின் இழிசெயலையும் சுட்டிக்காட்டாமல் தன் தவறை உணர்ந்து திரும்பிய தலைவனாகவும், நாட்டின் ஊரின் என்ற அடுக்குத் தொடர்களையும், நேர்மறைச் செய்திகளையும் எடுத்துரைப்பாக அமைவது இப்பாடலின் சிறப்பு ஆகும்.

**சூள்மொழி ஊடல் நிகழ்ச்சி**

தலைவியைப் பிரிந்து பரத்தையிடம் சென்ற தலைவன் மீண்டும் வந்தபோது அவனோடு ஊடிய தலைவி சொல்லியது.

**வார்த்தை குறியீடு**

"கோடுற நிவந்த நீடுஇரும் பரப்பின்
அந்திப் பராஅய புதுப்புனல், நெருநை,
மைந்துமலி களிற்றின் தலைப்புணை தழீஇ
.................. எல் இமிழ் அன்ன" (அக – 266)

நீரின் உயர்ச்சியையும், யானைபோன்ற கரைகளையும், பரப்பையும் அழகையும் தலைவி வர்ணிப்பதாக அமைந்துள்ளது. நாட்டின் நீர்வளம், யானை, மயில், நரத்தம் பூ

போன்ற வார்த்தைக் குறியீடுகளும், பரத்தையின் கண்கள், கூந்தல் போன்ற சிறப்புகளையும் குறிக்கும்விதமாக இப்பாடல் அமையப்பெற்றுள்ளது.

**எடுத்துரைப்பு**

பரத்தையின் அழகை வர்ணிக்கும்விதமாகவும், விருந்தோம்பல் பண்பை உணர்த்தும்விதமாகவும், படைவீரர்களை அரசன் காக்கும்விதத்தையும் அறியும் வகையில்,

"கள்ளுடைப் பெருஞ்சோற்று எல் இமிழ் அன்ன
கவ்வை ஆகின்றால் பெரிதே: இனி அஃது" (அக –226)

என்ற அடிகள் உள்ளன.

"அணங்குடை வரைப்பாக்கம் பொலியவந்து இறுக்கும்
திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சே எயோடு உற்ற சூளே!"

களவுக்காலத்தில் தரும் உறுதிமொழிகளைக் காப்பாற்றாத தலைவனைக் கடவுளுடன் ஒப்பிட்டு இகழ்ந்து உரைப்பதாக உள்ளது. உயர்வான உவமையுடன் இழிவுச் செயலை ஒப்புமைப்படுத்திக் கூறி எடுத்துரைத்ததை அறியலாம்.

**பரத்தை சூள் மொழி நிகழ்ச்சி**

இப்பாடலில் தலைமகளின் இடிந்துரைப்பைக் கேட்டு, ஊடலை அறிந்து, தலைவியின் தோழி கேட்கும்படி பரத்தையின் சூள்மொழி உள்ளது இப்பாடலில்.

**வார்த்தைக் குறியீடு**

"நீள் இரும் பொய்கை இரைவேட்டு எழுந்த
வாளை வெண்போத்து உணிஇய, நரைதன்
அடிஅறி வுறுதல் அஞ்சி. பைபயக்
கடிஇலம் புகூஉம் கள்வன் போல" – (அக – 276)

நீண்ட பெரிய நீர்நிலையில் இரை தேடுதலை விரும்பிப் புறப்பட்ட வெண்ணிற வாளைப் போத்தினை உண்ணும்பொருட்டுச் சென்ற நாரை. அதன் நடந்து செல்லும் ஓசையை அறிந்தால் நீரில் இருக்கும் மீன் அஞ்சும். அதனால் கள்வனைப் போல் செல்லும் என்று பாடல் அடிகள் கூறும்போது, தலைவன் தன்னுடைய காம உணர்ச்சியால் கள்ளத்தனம் பண்ணுவதைச் சாடுவதாக அமைந்துள்ளது. தான் நினைப்பதை அடைவதற்காக கள்ளத்தனம் உள்ளவன் என்பதை அறியமுடிகிறது. சரியான வார்த்தைக் குறியீடுகள் மூலம் (வாளை, நீர்நிலை, மீன், கள்ளதனம்) போன்றவற்றைச் சரியான இடத்தில் பொருத்தி விளக்குவதால் ஆழ்ந்த கருத்துகளை உணர்த்துவதாக உள்ளது.

**எடுத்துரைப்பு**

இப்பாடலில் பரத்தை தலைமகளின் தோழிக்குக் கேட்கும்படி சூள்மொழி உரைப்பதாக அமைந்துள்ளது.

"சாஅய் ஒதுங்கும் துறைகேழ் ஊரனொடு
ஆவது ஆக! இனிநான் உண்டோ?
வருகதில் அம்மஎம் சேரி சேர!
அரிவேய் உண்கண் அவன் பெண்டிர் காண"

தலைவன் வருவான் என்று உறுதிப்பட கூறும்போது தலைவன் மேல் உள்ள நம்பிக்கை உணர்த்தப்படுகிறது. இப்பாடலில் பரத்தையின் எடுத்துரைப்பில் ஒவ்வொரு சூள்மொழியிலும் தலைவன் தன்னைவிட்டு நீங்க மாட்டான் என்பதை உணர்த்தும் விதமாகவும் பெண்யானை கொண்டு ஆண்யானையை மயக்கிய பிறகு சிறை வைப்பார்கள். அதுபோல் என் அழகைக் கொண்டு தலைவனைக் கைப்பற்றுவேன் என்பதை உணரமுடிகிறது.

"தாரும் தானையும் பற்றி, ஆசிரியர்
பிடிபயின்று தரூஉம் பெருங்களிறு போல,
தோள் கந்தாகக் கூந்தலின் பிணித்து, அவன்
மார்புகடி கொள்ளேன் ஆகின், ஆர்வுற்று
இரந்தோர்க்க ஈயாது ஈட்டியோன் பொருள்போல்,
பரந்து வெளிப்படாது ஆகி
வருந்துன தில்ல, யாய் ஓம்பிய நலனே! " (அகம் – 276)

பரத்தையின் எடுத்துரைப்பில்கூட ஈகைத்திறன் மேம்படுகிறது. வறியவர்களுக்குத் தன்னிடம் உள்ளதைப் பகிர்ந்து கொடுக்கும் தன்மை அனைவரிடமும் இருப்பதை அறியலாம். குணத்தில் சிறப்பற்றவளாகப் பரத்தை இருந்தாலும். அனைவருக்கும் பொதுவான உயர்குணமாக இரவலர்க்கு வழங்குதல் உள்ளது. அத்திறனை தன்மேனியோடு ஒப்பிட்டுச் சிறப்பான முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பரத்தையின் சூள்மொழியாக இருந்தாலும் தன்மனநிலையை உணர்த்துவதாகவும், தலைவனின் தன்நிலை மறந்ததன்மை, தன்னால் முடியும் என்ற தலைக்கனத்தையும் உணர்த்துவதாக அமையப்பெற்றுள்ளது,

உணவினும் உண்டது அறவினது காமம்
புணர்தலில் ஊடல் இனிது (குறள் – 1326)

உண்பதைக் காட்டிலும் முன்னுண்டது செரித்தலே இன்பம். அதுபோலக் காமத்தில் கூடிப்பெறும் இன்பத்தைவிட ஊடிப்பெறும் இன்பமே சிறந்தது. அதுபோல இன்பம், துன்பம் கலந்த வாழ்க்கை என்பதை அறியும் வகையிலும், ஊடலால் ஏற்படும் பிரிவு தலைவியைத் தலைவன் சரியான முறையில் புரிதல் ஏற்பட வாய்ப்பாகவும், எந்நிலையிலும் தலைவனைப் புகழ்ந்து பேசுவதாகவும், தவறை மன்னிப்பதாகவும், பரத்தையின் எடுத்துரைப்பும் இப்பாடல்களில் சரியான நேரத்தில் கதை மாந்தர்கள் எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன.